

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்அன்னியூர் சிவா வெற்றி பெற்றதை வரவேற்று செஞ்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க.வினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கினர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளார்.

# கிருஷ்ணகிரியில் "மக்களுடன் முதல்வர்" திட்டம்!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, ஜூலை 16- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தருமபுரி மாவட்டம், பாளையம் புதூர் ஊராட்சி, அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், ஊரகப் பகுதிகளுக்கான "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை 11.07.2024 அன்று தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், கொண்டப்ப நாயன பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில், ஊரகப் பகுதிகளுக்கான "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் .கே.எம்.சரயு , கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, துறை வாரியாக அரங்குகள் அமைத்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு இ.ஆ.ப., தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களால், பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வண்ணம் 18.12.2023 அன்று மக்களுடன் முதல்வர் திட்டத்தினை முதற்கட்டமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தொடங்கி வைத்தார். நமது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் பெரிஅர்பன் பஞ்சாயத்துக்களில் முதல் கட்டமாக 18.12.2023 5 29.12.2023 வரை மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தகுதியான 7000 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, நகர்ப்பகுதிகளில் இந்தத் திட்டத்திற்கு கிடைத்த வெற்றி மற்றும் வரவேற்பினையடுத்து, இரண்டாவது கட்டமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரகப் பகுதிகளுக்கான "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை 11.07.2024 அன்று தொடங்கி வைத்துள்ளார்கள். நமது மாவட்டத்தில் இரண்டாவது கட்டமாக பர்கூர் ஊராட்சி ஒன்றியம், கொண்டப்பனநாயனப்பள்ளி, ஒப்பதவாடி, மல்லப்பாடி மற்றும் கிருஷ்ணகிரி ஒன்றியம், அகசிப்பள்ளி, தேவசமுத்திரம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டது. மேலும், கிருஷ்ணகிரி, பர்கூர், தளி, ஊத்தங்கரை, சூளகிரி, காவேரிப்பட்டிணம், கெலமங்கலம்,

ஒசூர், வேப்பனஹள்ளி, மத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 11.07.2024 முதல் 30.08.2024 வரை "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் 96 முகாம்கள் அமைக்கப்பட்டு காலை 10.00 மணி முதல் மாலை 3.00 வரை பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட உள்ளது. இம்முகாம்களில் 16 துறைகள் மூலமாக பெறப்படும் மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

இம்முகாமிற்கு வரும் பொதுமக்கள் யாரும் மனுக்களை எழுதி வர தேவையில்லை. உங்களது ஆவணங்களை எடுத்து வந்து முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையத்தில் நீங்கள் எந்த துறைக்கு மனு அளிக்க வந்துள்ளீர்கள் என்பதை விசாரித்து அந்தத்துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள இணையதள பதிவேற்றத்தில் விண்ணப்பித்து, உங்கள் மனுவின் விண்ணப்ப நகலினை பெற்றுக்கொள்ளலாம். அந்த மனுவிற்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். இதுதான் மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான நோக்கமாகும்.

எனவே, பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் "திட்ட முகாம்களில் கலந்துக் கொண்டு பயன்பெறலாம். மேலும் அனைத்து துறை அலுவலர்களும் பொதுமக்களின் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் நிவர்த்தி செய்து தர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் முன்னிலையில் மண்ணுயிர் காத்து, மண்ணுயிர் காப்போம் திட்டம் (2024-2025) கீழ், 2 பயனாளிகளுக்கு தக்கைப் பூண்டு பசுந்தாள் உரவிதைகளை வழங்கினார். மேலும், பல்வேறு துறைகள் மூலம் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டனர்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் முன்னிலையில் கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் அகசிப்பள்ளி ஊராட்சி, மங்கம்மாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், ஊரகப் பகுதிகளுக்கான "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ், துறை வாரியாக அரங்குகள் அமைத்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி , பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன் , நாகராசன், அஸ்லாம் , ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர் , குணவசந்தரசு, கோவிந்தன், தனசேகரன், சாந்தமூர்த்தி, பர்கூர் சட்டமன்ற பொறுப்பாளர் அன்பரசன், பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், கொண்டப்பநாயனப்பள்ளி ஊராட்சி மன்ற தலைவர் மதிவாணன்,

கழக மூத்த முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



கோவை காந்திபுரம் மாநகர பேருந்து நிலையம், அறிஞர்.அண்ணாசிலை பகுதிகளில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெற்றதை முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். கழக நிர்வாகிகள் பட்டாசு வெடித்தனர். இந்நிகழ்வில் பீளமேடு பகுதி2 செயலாளர் மா.நாகராஜ்,கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் lpf தமிழ்செல்வன், வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.போஸ்,கே.ராமநாதன், ப.மோகன்ராஜ், இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் டெம்போ சிவா, விவசாய தொழிலாளர் அணி தலைவர் சிவராமன்,சாரமேடு இஸ்மாயில்,இரா.பாலு,எஸ்.டி.எஸ்.சரவணன்,இரா.திலக்பாபு, சந்திரசேகர்,மணி, லதா,கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை தொகுதியில் பல்வேறு பகுதிகளில் சி.என்.அண்ணாதுரை எம்.பி. சுற்றுப்பயணம் செய்து வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.



இந்தியாவிற்கே முன்னோடி திட்டமான அரசு பள்ளிகளில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை முன்னிட்டு முதலமைச்சர் – கழக தலைவர் அவர்கள் நேற்று திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் துவக்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமலைராயசமுத்திரம் ஊராட்சி, பாகீரதி மற்றும் லிட்டில் ஃபளவர் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா மாணவர்களுக்கு உணவு வழங்கி , மாணவர்களுடன் இணைந்து உணவு அருந்தி சிறப்பித்தார்.



இந்தியாவிற்கே முன்னோடி திட்டமான அரசு பள்ளிகளில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் நேற்று திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டதினை அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் துவக்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு உதவி பெறும் பாத்திமா பள்ளியில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, மாணவர்களுக்கு உணவு வழங்கி , மாணவர்களுடன் இணைந்து உணவு அருந்தி சிறப்பித்தார். உடன் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா உள்ளார்.



காலை உணவு திட்டம் ஊரகப் பகுதியில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் நேற்று முதல் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் அவர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டு, துவக்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் எலவமலை பஞ்சாயத்துக்குட்பட்ட விருமாண்டாம் பாளையத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், ஒன்றியக் குழு தலைவர் பேரோடு பிரகாஷ் உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், குறிச்சி கோட்டை ஆர்.வி.ஜி அரசு உதவி பெறும் துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி, க.செந்தில்குமார், உடுமலைப்பேட்டை ஒன்றியக்குழு பெருந்தலைவர் மகாலட்சுமி முருகன், ஊராட்சி மன்ற தலைவர் கோபாலகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர் கமலவேனி முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட தளவாய்பட்டினம் ஊராட்சி கிழக்குத் தெருவில் அரசு உதவி பெறும் சி.எஸ்.ஐ. ஆரம்ப பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில் குமார், துணைத் தலைவர் சசிகுமார், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் க.செல்வராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆரோன் செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஊரக பகுதியில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் விரிவுபடுத்தப்படும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாரம், ஆர்.சி.செட்டிப்பட்டி, புனித நிக்கோலஸ் நிதியுதவி நடுநிலைப் பள்ளியில் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கி தொடங்கி வைத்தனர். உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.